பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 14 (27—5—68) திங்கள் ★ வெளியூர்: வைகாசி 15 (28—5—68) செவ்வாய் [இதழ்: 287

வேண்டாத வேலைநிறுத்தம்

அமைச்சர் செ. மாதவன் கண்டனம்

சர்வாதிகார அரசாகச் செயல்பட முடியாதென விளக்கம்

கோவை, மே 26—

"மூடப்பட்டிருக்கும் ஆலைகளைத் திறக்கும்படி ஆணை பிறப்பிக்க நம்முடைய ஆட்சி சர்வாதிகார ஆட்சியல்ல. அரசியல் சட்டக் கட்டுக்கோப்புக்கு இணங்கவும், தற்போதுள்ள அதிகாரங்கட்குட்பட்டும்தான் நாம் செயலாற்ற முடியும்.

"அனைத்திந்தியத் தன்மைவாய்ந்த ஒரு நெருக்கடி இருக்கும்போது, தொழில் வளர்ச்சி -- ஒழுங்கு முறைச் சட்டத்தின்கீழ் விசாரணை நடத்தும்படி மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கும் வழி ஒன்றுதான் மாநில அரசிடம் உள்ளது; இதனை முன்பே செய்துவிட்டோம்; விசாரணைக் குழுவின் வேலைக்குக் காலவரம்பு நிர்ணயிக்க அரசுக்கு அதிகாரமில்லை"

என்று, தமிழகத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்கள், குன்னூரில் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் தெளிவுபடுத்தினர்.

"கோவை மாவட்டத்தில் கம்யூனிஸ்டு, இந்து மஸ்தூர் சபா முதலிய சங்கங்களைச் சேர்ந்த ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்தது நியாயமற்றது —வருந்தத்தக்கது" என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் செ. மாதவன் மேலும் கூறியதாவது:—

'மேற்கு வங்கத்தில் டிராம் கம்பெனியை அவசரச் சட்ட மூலம் அரசு ஏற்றுக்கொண்டதுபோல இங்கும் ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டும் என்று சில தொழிற் சங்கங்கள் — குறிப்பாகக் கம்யூனிஸ்டுக் கட்சியினர் கோருகின்றனர்.

அவசரச் சட்ட மூலம் ஆலைகளை அரசு மேற்கொள்வதைவிடத் தொழில் வளர்ச்சி — ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி, ஆலைகளை மேற்கொள்வது பயனுள்ளதாயிருக்கும். இதுபற்றி நான் ஏற்கனவே அந்தச் சட்டத்தைப் பரிசீலித்தேன்.

அவசரச் சட்டத்தின்கீழ் ஒரு தொழிற்சாலையை அதிகப்படியாகப் போனால் ஒரு மூன்றுண்டுக் காலம்தான் அரசு மேற்கொண்டு நடத்தலாம் என்பது தெரியவந்தது. மூன்றுண்டுக்குப் பிறகு அந்த ஆலையைப் பழைய நிர்வாகத்திடமே மீண்டும் ஒப்படைத்தாக வேண்டும்."

ஊதியப் பட்டுவாடா தொடர்பாசத் தொழிலதிபர்களின் தவறு பற்றிச் சங்கங்கள் கூறும் புகார்கள் குறித்து அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

"கொடுக்கும் சக்தி இருந்து, தவறு புரிந்த நிர்வாகம் சம்பந்தமாகத் தொழிற் சங்கங்கள் திட்டவட்டமான புகார் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன்' என்று ஏங்கனவே உறுதியளித்துள்ளேன்"

மூடப்பட்ட ஆலைகள் பற்றி விசாரணைக் குழு

டில்லிக்குத் தமிழக அரசு கடிதம்

சென்னை, மே 27—

"'தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள எல்லா நூற்பு ஆலைகள் பற்றியும் விசாரிக்கத் தனிக் குழு ஒன்றை உடனே நியமிக்க வேண்டும்' என்று தமிழக அரசு, மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது"

என்று, தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

"தமிழக அரசின் பரிந்துரைமீது மத்திய அரசு, தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள 6-ஆலைகள் பற்றியும் விசாரிக்கக் குழு ஒன்றை நியமித்தது; அது தவிர, 'தமிழ்நாட்டில மூடப்பட்டிருக்கும் மற்ற ஆலைகள் பற்றியும் விசாரிக்க வேண்டும்; இந்த விசாரணை விரைவாக நடத்தப்படுவதற்காக இரண்டாவது குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்' என்று மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது"

என்றும் அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் விளக்கியுள்ளார்.

'தமிழக அரசின் முயற்சிக்கு குந்தகம் வேண்டாம்'

தி.ப.தொ.மு. சங்கத் தலைவர் காட்டூர் கோபால் அறிக்கை

கோவை, மே 26—

திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் தோழர் காட்டூர் கோபால் விடுத்துள்ள அறிக்கையில், தி. ப. தொ. மு சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை, 'இவ் வேலை

(4-ம் பத்தி பார்க்க)

'அண்ணவுடன் பேசியபின் வேலை நிறுத்தத்துக்கு அவசியமில்லை'

ஐக்கிய தொழிலாளர் சங்கச் சார்பில் சின்னதுரை அறிக்கை

"பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை குறித்துத் திருச்சியிலும், சென்னையிலும் முதலமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு வேலைநிறுத்தத்துக்கு அவசியமே இல்லை. நெருக்கடிக்குத் தீர்வு காண விரைவில் நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள்.

"கம்யூனிஸ்டு, இந்து மஸ்தூர் சங்கம் உட்பட ஐந்து தொழிற் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் வேலைநிறுத்தத் திட்டத்தைக் கம்யூனிஸ்டுகள் தங்கள் அரசியல் நோக்கத்திற்காகவே தூண்டிவிட்டுள்ளனர்"

என்று, ஐக்கிய ஆலைத் தொழிலாளர் சங்கச் செயலாளர் திரு பி. எஸ். சின்னதுரை அறிவித்திருக்கிறார்.

"இந்த வேலை நிறுத்தத் திட்டத்தில சில ஆலை அதிபர்களுக்கும் தொடர்பு இருக்கக் கூடுமோ என நான் ஐயுறுகிறேன்"

என்றும் திரு. பி. எஸ். சின்னதுரை கூறியிருக்கிறார்.

இந்த வேலை நிறுத்தத்தில் இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசும், ஐக்கிய தொழிலாளர் சங்கமும் பங்கேற்கவில்லை.

(1-ம் பத்தி தொடர்ச்சி)

நிறுத்தத்தில் ஈடுபடவேண்டாம்' என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"முதலமைச்சர் அண்ணா அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் திரு. மாதவன் அவர்களும், மூடப்பட்ட ஆலைகளைத் திறக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்; இந்த நேரத்தில் தொழிலாளர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் அளித்து உதவ வேண்டும்"

என்று, அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டம் கொண்டுவர புதுடில்லியின் திட்டம்

புதுடில்லி, மே 26—

குடியரசுத் தலைவர் ஆட்சி அமுலுக்கு வந்தநாள் முதல் மூன்று திங்களுக்குள் இடைத் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்ற அளவில் சட்டம் இயற்றுவதுபற்றி இந்திய அரசு ஆலோசித்து வருகிறது.

"பருவ நிலைமை போன்ற காரணங்கள் இருந்தாலன்றி மூன்று திங்களுக்குள் இடைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு நியாயம் ஏதும் இருக்கமுடியாது" எனக் கூறப்படுகிறது.

தன்னைத்தானே தண்டித்துக்கொள்கிறார் ஆளுநர்!

அதிகாரிகள் செய்த தவறுக்குத் தமது சம்பளத்தில் வெட்டு!

டோக்கியோ, மே 26—

தமக்குக் கீழ் பணி புரியும் அதிகாரிகள் செய்த தவறுக்காகத் தமக்குத்தாமே தண்டனை விதித்துக்கொண்டார்—டோக்கியோவின் ஆளுநரான டாக்டர் ரியோகிச்சி மினேபி!

அவர் தமது ஊதியத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொண்டார்; அதாவது, தமது மாத ஊதியமான 3,00,000 'யென்'களை ('யென்' என்பது ஜப்பானிய நாணயம்) 2,10,000 'யென்'களாகக் குறைத்துக் கொண்டார்.

மூன்று திங்களுக்கு இந்த ஊதியக் குறைப்பைச் செயல்படுத்துமாறு அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அதேபோல் அவரது அதிகாரிகள் 70 பேர் ஊதியத்திலும் வெட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழலிலும் கையாடலிலும் அவர்கள் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகத் தேர்தல்கள்

சென்னை மாவட்டத்தின் வட்டத் (டிவிஷன்) தேர்தல்கள்

ஜூன் 1, 2 ஆகிய நாட்களில்.

புதிதாக விரிவாக்கப்பட்ட 120 வட்டங் (டிவிஷன்)களின் அடிப்படையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சாதாரண ஆளைப்போலவா பேசுவது?

சுப்பிரமணியத்துக்கு ம. பொ. சிவஞானம் பதில்

சென்னை, மே 27—

"கோவையிலே இன்றையத்தினம் ஆலைகள் மூடப்பட்டுள்ளனர்; தொழிலாளர்கள் கிளர்ச்சி நடத்துகின்றனர். உடனே தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், 'ஆ! எத்தனை ஆலைகள் இவர்கள் ஆட்சியில் மூடப்பட்டுள்ளன' என்று கேட்கிறார்!

"ஆலைகள் மூடப்படுவது யாரால்—எதனால்—என்று சிந்திக்க வேண்டாமா?

"மத்திய ஆட்சி முன்பு போட்ட வரியில், இப்போது ஆலையின் சொத்துக்களையும் கூட்டி வரிப்பளுவை உண்டாக்கியிருக்கிறது!

"அதுமட்டுமா? சங்கிலித் தொடர்போல் வரவேண்டிய ஐந்தாண்டுத் திட்டங்களில் தேக்கம் ஏற்பட்டு, நான்காவது திட்டம் இன்னும் செயல்படவில்லை! அந்தப் பொருளாதார மந்தத்தின் ஒரு குமிழிதான் இந்த வேலை நிறுத்தம்!

"அமைச்சர் பதவியிலிருந்த சுப்பிரமணியம் இப்படிப்பட்ட பொருளாதாரக் கண்ணேட்டத்துடன் அல்லவா பார்க்க வேண்டும்? ஆனால், சாதாரணமான ஆளைப்போல, 'மூடப்பட்ட ஆலைகளை ஏன் அண்ணதுரை திறக்கவில்லை' என்று கேட்கிறார்! நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சரே, 'ஆலைகளைத் திறக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இல்லை என்று கூறியிருக்கிறார்.

"சுப்ரீம் கோர்ட்டும், அவசரச் சட்டம்போடும் குடியரசுத் தலைவரும், சட்டத் திருத்தம் கொண்டுவரும் அதிகாரமும் படைத்த மத்திய அரசும் இந்தப் பிரச்சினையில் இப்படிப் பேசும்போது, சுப்பிரமணியம், 'அண்ணதுரை ஏன் ஆலைகளைத் திறககவில்லை' என்கிறார்'

"ஆலைகளைத் திறப்பது பற்றி சுப்பிரமணியத்திற்கு அக்கறை இருந்தால் — இந்த நாட்டுத் தொழிலாளர்மீது அவருக்கு அக்கறை இருந்தால்—அவரே டில்லிக்குச் சென்றிருக்க வேண்டாமா? 'பணத்தைக் கொடு; ஆலைகளைத் திறக்கச் செய்' என்று வாதாடியிருக்கவேண்டாமா?

"அதை விட்டுவிட்டு, 'ஆலைத் திறக்கக்கூடாது; தொழிலாளர் ஊர்வலம செல்ல வேண்டும்; ரகளை ஏற்படவேண்டும்; துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற வேண்டும்; காங்கிரசு ஆட்சிக்கும்—இதற்கும் வேறுபாடில்லை என்று ஏற்படவேண்டும்' என்று நினைப்பில் பேசுவது சரியா?"

—91-வது வட்டக் கூட்டத்தில்

நம்நாடு
ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 14 (27—5—68) திங்கள்

உணவு அமைச்சரின் விளக்கம்

சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர், தொடர்ந்தாற்போல் இரண்டாண்டுக்காலத்துக்கு மேலாகப் பயங்கரமான உணவு நெருக்கடி தமிழகத்தைப் பற்றிக்கொண்டிருந்தது. இயற்கைக் கோளாறு எதுவாக இருந்திட்டாலும், அப்பொழுது இருந்துவந்த காங்கிரசு ஆட்சி கொள்முதல் செய்வதிலும், குறைந்தபட்சமாகக் கொள்முதல் செய்ததை விநியோகிப்பதிலும் கையாண்ட சீரற்ற முறையே தமிழகத்தில் தலைதூக்கியிருந்த உணவு நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமாகும்.

போதிய உணவு கிடைக்கப்பெருமல் தமிழகம் தொல்லைக்குள்ளாக்கப்பட்டிருந்த நேரத்தில் பொதுத் தேர்தலும் வந்தது. திறமையற்ற நிர்வாகத்தால் தங்களை உணவுக்குத் திண்டாட வைத்த காங்கிரசுக் கட்சியை ஆட்சிப் பீடத்திலிருந்து தமிழக மக்கள் விரட்டிவிட்டனர். ஆட்சி அமைத்திடும் பொறுப்பை அம்மக்கள் நமது கழகத்திடம் மனமுவந்து ஒப்படைத்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், ஆட்சிப் பொறுப்பைக் கழகம் ஏற்றுக்கொண்ட நேரத்தில், அரசின் கையிருப்பில் சிறிதளவே உணவுத் தானியங்கள் இருந்தன. சென்னையிலும் கோவையிலும் செயல்படுத்தப்பட்டு வந்த உணவுப் பங்கீட்டுக் கடைகளின் தேவையை நிறைவு செய்ய முடியாத அளவுக்கு உணவு நெருக்கடியைக் கழக ஆட்சி சந்திக்க வேண்டியதாயிற்று.

ஆட்சி அமைத்தவுடனேயே அச்சுறுத்தக்கூடிய உணவு நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதை அண்ணாவின் அமைச்சரவை எதிர்பார்க்கவில்லை.

உணவு நெருக்கடியை எதிர்பார்க்கவில்லை என்றாலும், நிலைமையை உள்ளது உள்ளவாறு உணர்ந்துகொண்டு, அப்பொழுது கிடைத்த அரிசியைக் கொள்முதல் செய்வது என்ற முடிவெடுத்து, அம்முடிவை உடனடியாகவும் தீவிரமாகவும் செயல்படுத்தத் துவங்கியது. தேவையான அரிசியைக் கொள்முதல் செய்து, சீராக விநியோகமும் செய்தது. கழக ஆட்சியின் இம்முயற்சிக்கு அரசு உணவுத் துறை ஊழியர்கள் அனைவரும் சுறுசுறுப்பாக ஒத்துழைப்பு அளித்து, நீடித்திருந்துவந்த உணவுப் பிரச்சினையை, இல்லாமற் செய்துவிட்டனர்.

உணவுத் துறையில் கழக ஆட்சி அப்பொழுது பெற்ற வெற்றி மகத்தானதாகும். இப்பொழுதும் உணவுத் துறையைப் பொறுத்தவரையில், கவலையற்ற நிலையை உருவாக்கி இருப்பதும் மகிழ்ச்சிகொள்ளத்தக்க வெற்றியே ஆகும்.

பொறுப்பேற்ற நேரத்தில் இருந்துவந்த உணவு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதிலும், அத்தகைய நெருக்கடி மீண்டும் இங்கு தலைகாட்டவிடாமல் தேவையான அளவு உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்வதிலும், தங்குதடையின்றி விநியோகம் செய்வதிலும் கழக ஆட்சி பெற்றிருக்கின்ற வெற்றி, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களின் 'முன்னெச்சரிக்கையுடன் கூடிய விழிப்பான உழைப்பின் விளைவே' என்பது மிகையல்ல. தாம் ஏற்றுள்ள பொறுப்பைத் திறம்படச் செயல்படுத்தி வெற்றி காண்பதில் உணவு அமைச்சர் மதியழகன் அவர்கள் குறிப்பிடத்தக்க சாதனையைப் புரிந்திருக்கின்றார் என்பது பாராட்டுதற்குரியதாகும்.

ஆட்சிப் பொறுப்பைக் கழகம் ஏற்றுக்கொண்டதும், உணவு அமைச்சர் மதியழகன் அவர்கள் தீவிரமாகக் கொள்முதல் செய்யத் துவங்கியதும், அரசியல் காரணங்களுக்காகப் பல முனைகளிலிருந்து எதிர்ப்புக் கிளம்பியதுண்டு. 'அரசாங்கக் கொள்முதலுக்குக் கொடுக்கின்ற விலை குறைவானது' என—இப்பொழுது குறைபட்டுக்கொண்டிருப்பது போன்றே—அப்பொழுது குறைபட்டுக்கொண்டுதான் இருந்தனர். 'விதை நெல்லைக்கூட அதிகாரிகள் அச்சுறுத்திக் கொள்முதல் செய்கின்றனர்' எனச் சிலர் புரளியும் கிளப்பிக்கொண்டிருந்தனர். 'கொள்முதல் என்ற போர்வையில் புனிதமான பூஜை அறையில் அதிகாரிகள் புகுவதா' என ஒப்பாரி வைத்தவர்களும் உண்டு.

'மக்களுக்குப் போதுமான அளவுக்கு உணவு வழங்கவேண்டுமே' என்ற கடமை உணர்ச்சியின் காரணமாக—கிளம்பிய எதிர்ப்புக்களின் அடிப்படை இல்லாத தன்மையை விளக்கிக் காட்டி—அவ்வெதிர்ப்புக்களை அலட்சியம் செய்தார், உணவு அமைச்சர்!

'உணவு அமைச்சர்' என்ற முறையில், தமிழக மக்களுக்குத் தாம் ஆற்றிவரவேண்டிய கடமையை நிறைவேற்றிவருகின்ற பொழுது, அதனால் உருவெடுக்கக்கூடிய எதிர்ப்புக்களுக்கு—தக்க காரணம் இருந்தாலும் இல்லாமற்போனாலும்—தக்க சமாதானம் கூறவேண்டிய கடமையும் உணவு அமைச்சருக்கு உண்டு. இக்கடமையையும் நமது உணவு அமைச்சர் செவ்வனே நிறைவேற்றிவருகின்றார் என்ற உண்மையை, அரசியலில் மாறுபட்டிருக்கின்றவர்களும் ஒப்புக்கொள்ளுவர்.

'மூன்று ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் படைத்திருக்கின்ற விவசாயிகளிடம் அரசு கொள்முதல் செய்யக்கூடாது' என்பது, அரசியலில் ஒரு சாராரின் கோரிக்கையாகும். 'கொள்முதல் விலையை, மேலும் உயர்த்தவேண்டும்' என்பது வேறொரு சாராரின் வேண்டுகோளாகும்.

இவ்விரண்டு சாராரில் முதல் சாராரின் கோரிக்கைக்குத் தக்க விளக்கம் அளித்துள்ளார் உணவு அமைச்சர். அவ்விளக்கம் நியாயமானதாகவும், உண்மையானதாகவும் அமைந்திருக்கிறது.

ஏறத்தாழ 44.4 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், இப்பொழுது ஒரு ஏக்கர் வரை உள்ளவர்களிடம் அரசு கொள்முதல் செய்வதில்லை.

இப்படி, கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற நிலத்தின் அளவு 8.5 இலட்சம் ஏக்கர்களாகும்.

மூன்று ஏக்கரும் அதற்குக் குறைவானதுமாகச் சேர்த்து மொத்தத்தில் நெல் உற்பத்தி செய்யப்பட்டு வரும் நிலத்தின் அளவு 25.37 இலட்சம் ஏக்கர்களாகும். இவ்விரண்டு இனத்தையும் மொத்த நெல் விளையும் அளவான 44.4 இலட்சம் ஏக்கரிலிருந்து கழித்து எஞ்சியிருக்கின்ற நிலத்தில்தான் அரசு கொள்முதல் செய்தாக வேண்டும்.

இதன் விளைவு என்ன?—'ஒரேயடியாகக் கொள்முதல் செய்வதைக் கைவிட்டுவிடுவது' என்பதுதான்!

'கொள்முதல் செய்வதிலிருந்து, மூன்று ஏக்கர் வரை நிலம் உள்ளவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும்' எனக் கோருகின்றவர்கள் அதே மூச்சில், 'இப்பொழுது வழங்கப்பட்டு வருவதைவிட உணவுப் பங்கீட்டின் அளவைக் கூட்டவேண்டும்; சிற்றூர்ப் பகுதிகள் அனைத்திலும் நியாயவிலைக் கடைகளைத் திறக்கவேண்டும்' என்றும் கோரிவருகின்றனர்!

கொள்முதல் செய்வதையும் கைவிட்டுவிட்டு, கூடுதலாக அரிசி விநியோகிக்கும் பொறுப்பையும் நிறைவேற்றிவர அரசினால் எப்படி இயலும்?

உணவு அமைச்சர் மதியழகன் அவர்களின் விளக்கம் இதுதான். 'இதுதான் உண்மை; இதுதான் நியாயம்' என்பது மக்களுக்குப் புரியும்.

—கா. க.

ஊராட்சித் தலைவரின் புதுவகைப் போராட்டம்

ஜெய்ப்பூர், மே 26—இராஜஸ்தான் மாநிலம் சித்தூர்கர் மாவட்டத்தைச் சேர்ந்த ஊராட்சிமன்றத் தலைவர் ஒருவர் மாநில அரசின் நிதியிலிருந்து ரூ. 15 இலட்சம் செலவழிக்கக் கோரி முடி வளர்த்து வருகிறாராம்.

சங்கர்லால் பரீக் என்னும் அவர், ராஷ்மி என்னும் தமது கிராமத்துக்கான இரண்டு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றவும், தமது சொந்த ஊரான ராஷ்மியில் மின்சார வசதி செய்து கொடுக்கவும், ஹாமிர்கர் என்னுமிடத்திலிருந்து ராஷ்மி வரை 30 மைல் நீளச் சாலை அமைக்கவும் வேண்டும் என்று மாநில அரசைக் கோரியிருக்கிறார். இந்தப் பணிகள் நிறைவேறும் வரை முடி வளர்ப்பது என்று உறுதிபூண்டிருக்கிறாராம்.

44 வயதுடைய திரு. பரீக், ஏற்கனவே பத்தாண்டுக்குமுன் ஒருமுறை இதேபோல் ரூ. 12 இலட்சம் செலவிடக் கோரி, முடியெடுத்துக் கொள்ளாமல் இருந்திருக்கிறார்.

'நினைவுக்குச் சான்றாக சிலை அமைகிறது'

"........எந்த மனிதரின் அல்லது இனத்தின் கொள்கைகளை நான் உறுதியாக எதிர்க்கிறேனோ அதே மனிதர் அல்லது இனம் என்னை என்றும் வெறுத்ததில்லை; என்மீது அவர்கள் அன்பும், ஆதரவும் கொண்டுள்ளதை அறிந்திருக்கிறேன். அவர்களின் நம்பிக்கைக்கு நான் பாத்திரமாகியிருக்கிறேன்; இந்தநிலையை நினைத்து நான் அடிக்கடி மகிழ்ந்திருக்கிறேன்......"

"காந்தியாரின் மேற்கண்ட வார்த்தைகள் உண்மை என மெய்ப்பிக்கப்பட்டு விட்டன. எந்த பிரிட்டிஷ் அரசை எதிர்த்துப் போரிட்டு இந்தியாவின் சுதந்தரத்தைப் பெற்றாரோ—அதே பிரிட்டிஷ் மக்களுக்கு அவரிடம் உள்ள அன்பும் மதிப்பும் இன்றும் குறையவில்லை; இந்த நாட்டின் ஒரு முக்கியமான இடத்தில்—சதுக்கத்தில்—அவரது நினைவுக்குச் சான்றாக ஒரு சிலை அமைவது அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்"

என்று, இலண்டனில் காந்தியார் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில், பிரிட்டிஷ் தலைமையமைச்சர் வில்சன் கூறினார்.

முதலமைச்சர்கள் மாநாடு

சென்னையில் நடைபெறும்

திருச்சி, மே 24—'சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் எதிர்காலம் பற்றி விவாதிக்கவிருக்கும் முதலமைச்சர்கள் மாநாடு, சென்னையில் ஜூன் 11, 12-ம் நாட்களில் இராஜாஜி மண்டபத்தில் நடைபெறும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் இங்கு தெரிவித்தார்.

தென்காசி இடைத் தேர்தல்

இன்னும் நாள் குறிப்பிடவில்லை

சென்னை, மே 24—தமிழகத்தில் தென்காசி சட்டமன்ற இடைத் தேர்தலுக்கான தேதி இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்படலாம்.

தேதியை நிர்ணயிப்பது பற்றி மாநில அரசுக்கும்—தேர்தல் குழுவுக்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடந்துவருகிறது.

இடைத் தேர்தலை, ஜூலை 3-ஆம் நாள் நடத்துவதென்று ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது; நிர்வாக வசதியைக் கருதி தேர்தல் தேதியை ஒத்திவைக்குமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

தேவையும் கிடைப்பதும்!

வாஷிங்டன், மே 25—இந்தியாவுக்கு இந்த ஆண்டில் 140 கோடி டாலர் (ரூ. 1,050 கோடி) உதவி தேவைப்படுமென்று இந்தியா உதவி நாடுகள் குழு மதிப்பிட்டிருக்கிறது.

இத்தொகையில் 40 கோடி டாலர் (சுமார் ரூ 300 கோடி) சில குறிப்பிட்ட திட்டங்களுக்காகும்.

ஆனால், இந்தியாவுக்கு நடைமுறையில் எவ்வளவு கிடைப்பதென்பதில்தான் இன்னமும் பெரும் அளவுக்கு நிச்சயமற்ற நிலை காணப்படுகிறது.

இக்குழுவில் [illegible] நாடுகளும் உலக பாங்கியும் அங்கம் வகிக்கின்றன.

கொள்முதலில் விதிவிலக்கு

மேலும் விரிவுபடுத்த இயலாது!

"தமிழ்நாட்டில் மொத்தம் 45 இலட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது; இதில் 25.4 இலட்சம் ஏக்கர் (சுமார் 57 சதவிகிதம்) மூன்று ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களிடம் உள்ளது.

"ஏற்கனவே ஒரு ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் உள்ளவர்கட்கு கொள்முதலிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அவர்களிடம் உள்ள மொத்த நிலம் 8.6 இலட்சம் ஏக்கராகும்.

"மூன்று ஏக்கருக்குக் குறைவாக வைத்திருப்போருக்கும் கொள்முதலிலிருந்து வாக்களிப்பது என்பது இயலாத காரியம்; ஏனெனில், அந்த அளவுக்கு நிலவுடைமை சிறிது சிறிதாக அமைப்பு இருக்கிறது. சிறு சிறு அளவில் சிதறிக்கிடக்கின்றன."

—அமைச்சர் மதியழகன்

தமிழக அரசு நடத்தவிருக்கும் 'லாட்டரி'ச்சீட்டு

பாதித் தொகை சுகாதாரப் பணிகளுக்கு வழங்கப்படும்

அமைச்சர் சாதிக் பாட்சா தரும் தகவல்

திருச்சி, மே 24—"தமிழக அரசு நடத்த எண்ணியிருக்கும் 'லாட்டரி'ச் சீட்டு மூலம் கிடைக்கும் இலாபத்தில் சுமார் பாதித் தொகை, மாநிலத்தின் பொது சுகாதாரத் திட்டங்களுக்காகச் செலவிடப்படும்"

என்று, சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா செய்தியாளர்களிடம் கூறினார்.

"அரசு நடத்த எண்ணியிருக்கும் லாட்டரிச் சீட்டு மூலம்—பரிசுகள், ஏஜெண்டுகளுக்குக் கமிஷன் கொடுத்த பின்—நிகர இலாபம் சுமார் ஒரு கோடி ரூபாய் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சித்த மருத்துவப் பிரிவு

"திருச்சி காந்தி நினைவு அரசாங்க மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஒன்றை விரைவில் அரசு ஆரம்பிக்கும். அந்தப் பிரிவில் 15 படுக்கைகள் இருக்கும். படிப்படியாக எல்லா மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவப் பிரிவுகளைத் திறக்க அரசு முடிவு செய்திருக்கிறது" என்றும் அமைச்சர் கூறினார்.

கருத்தடைச் சிகிச்சை

"இரண்டு குழந்தைகள் உள்ள பெற்றோர்களுக்கும்—அவர்களாக முன்வந்தால்—கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யலாம் என்று தமிழக அரசு கூறிய யோசனையை இந்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது" என்று அமைச்சர் தெரிவித்தார்.

"திருச்சி மாவட்டம் தாத்தையங்கார்பேட்டையில் ஜூன் 3-ஆம் நாள் அன்று ஆரம்பச் சுகாதார நிலையம் திறக்கப்படும்" என்று அவர் கூறினார்.

அண்ணாவைக் கவர்ந்த புதிய பாசன முறை!

திருச்சி அருகே குடுமியாமலையில் உள்ள வேளாண்மைப் பண்ணையில் நீர் தெளிப்புப் புது பாசன முறையை முதலமைச்சர் அண்ணா அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

துவக்கக் கட்டமாக 4 ஏக்கர் நிலத்தில் சோளச் சாகுபடிக்கு இந்தப் பாசன முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது; படிப்படியாகப் பண்ணையில் இன்னும் ஏராளமான நிலத்துக்கு இது விரிவாக்கப்படும்.

இந்தப் பாசன முறை, அண்ணா அவர்களை மிகவும் கவர்ந்தது.

சோவியத் இரஷ்யா, இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இத்தகைய முறை அமுலில் இருக்கிறது.

தற்போது திருச்சி மாவட்டத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள அரசாங்க விவசாயப் பண்ணையில் இந்தப் புதிய முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒரு பருவத்தில் 12 ஏக்கருக்குத் தண்ணீர் தெளிக்கும் இயந்திரம் இங்கு நிறுவப்பட்டுள்ளது. இதனால் தண்ணீர் வீணாகாது. நேராகத் தண்ணீர் பயிருக்குக் கிடைக்கும்.

புற்று நோய்க்குப் புதிய மருந்து

புற்று நோய்க்குச் சிகிச்[illegible] அளிக்க 'ஸிவன்கான்' என்[illegible] புதிய மருந்து ஒன்றை ஜெர்[illegible] டாக்டர் வால்டர் மீராப் க[illegible] பிடித்துள்ளார்.

இனி 'பிழைக்காது' என்று கைவிடப்பட்ட நோயாளிகளிடம் இம்மருந்தைப் பயன்படுத்திய பின்னர், குறிப்பிடத்தக்க மாறுதல் காணப்பட்டது.

தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி

தமிழக அரசின் செயலைப் பாராட்டித் தீர்மானம்

சென்னை, மே 21—

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் சென்னையில் கூடியது ; மாநிலப் பொதுச் செயலர் திரு வி. இராமுன்னி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

வெளிநாடு சென்று திரும்பியுள்ள தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கட்குச் சென்னையில் வரவேற்புக் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

தமிழக அரசு, சென்னை-மதுரை போன்ற நகரங்களிலுள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி அளித்ததற்கும், தமிழக மேலவையில் துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் பிரதிநிதித்துவம் பெற வழி செய்துள்ளதையும், 7,300 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி உள்ளமைக்கும், ஹையர் கிரேடு இடத்தில் பணிபுரியும் 3,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு ஊதியம் வழங்க வழி செய்துள்ளதற்கும் தமிழக அரசைப்பாராட்டி நன்றி தெரிவிக்கப்பட்டது.

பொதுச் செயலாளர் வி. இராமுண்ணி அவர்களைக் கல்வி ஆலோசனைக் குழுவில் இடம் அளித்துப் பெருமைம்படுத்தியதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வேலைப் பாதுகாப்புக்கான எல்லா வழிமுறைகளுக்கும் வழி செய்டவும், கல்விக் கொள்கையை மாநிலப் பொதுக் குழுவை குற்றாலத்தில் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது.

மாவட்டத் தேர்தல்கள் அனைத்தையும் இவ்வாண்டு செப்டம்பர் இறுதிக்குள் நடத்திவிட வேண்டுமென முடிவு செய்கிறது.

கூட்டத்திற்கு மாநிலத் துணைத் தலைவர் திரு இரா. இராமையா தலைமை வகித்தார்.

திருவரங்குளம் ஒன்றியத்தில் சீரணியினர் பணி

பள்ளிக் கட்டிடங்களுக்கு வெள்ளையடிக்கின்றனர்

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எல்லைப்பட்டி, வாகவாசல் ஆகிய கிராமங்களிலுள்ள பள்ளிக் கட்டிடங்களுக்கு 16—5—68-ம் நாளன்று சீரணியினர் வெள்ளையடித்தார்கள்.

மேலும் அவர்கள், குறள் வரிகளை சுவர்களில் எழுதினார்கள்.

மேலும் 15 பள்ளிக் கட்டிடங்களுக்கு கோடை விடுமுறை நாட்களுக்குள் வெள்ளையடிக்கச் சீரணியினர் திட்டமிட்டுள்ளனர்.

பள்ளிக்கு வெள்ளையடிக்கும் பணியில் சீரணியினர்

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பாத்தம்பட்டி, வெள்ளாகுளம், குப்பயப்பட்டி, பெருங்கொண்டான்விடுதி. வெண்ணாவல்குடி ஆகிய பள்ளிக் கட்டிடங்களுக்கு சீரணியினர் வெள்ளையடித்து, சுவர்களில் 'திருக்குறள்' எழுதினார்கள்.

21—5—68 அன்று வடக்குச் செட்டியாபட்டி பள்ளிக் கட்டிடத்திற்கு சீரணியினர் வெள்ளையடிக்கும் விழாவிற்கு புதுக்கோட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு தியாகராசன் தலைமைவகித்தார்.

சீரணியினரும், விழாத் தலைவரும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதமும் சேர்ந்து பள்ளிக் கட்டிடத்திற்கு வெள்ளையடித்தனர்.

சீரணியினர் திருவரங்குளம் வட்டாரத்தில் செய்துவரும் பணிகளைப் பற்றியும் தமிழக அரசு கிராம மக்களுக்கு செய்துவரும் திட்டங்களைப் பற்றியும் திருவரங்குளம் ஆணையர் விளக்கினார்.

பள்ளித் தலைமை ஆசிரியர் நன்றி நவின்றார்.

எளியதொரு பழங்காலக் கண்டுபிடிப்பு 37,000 பேருக்கு நம்பிக்கை ஒளி அளிக்கிறது



பீகார் ராஜ்யத்தில், பலாமு மாவட்டத்தைச் சேர்ந்த புர்வாதி வட்டாரத்தின் 37,000 மக்களும் 1967 ஆண்டுக் கொடிய வரட்சியைத் தமது ஆயுளில் மறக்க மாட்டார்கள்.

டாடா நிவாரணத்திட்டம் வந்தது. உடனடி அபாயத்தைக் கடக்க, உணவு, உடை, மருத்துவ் வசதி கொடுத்து உதவியது. எல்லாவற்றுக்கும் மேலான உதவி, உயிரளிக்கும் நீரைப் பெறுவது எப்படி?' என்னும் வழியை மக்களே உணர வைத்ததாகும்.

டாடா நிவாரணத் திட்டம்தான் முதன் முதல் நீர்ச்சக்கரம் என்னும் எளிய கருவியை இங்கே பழக்கத்துக்குக் கொண்டு வந்தது. இவற்றைக் கையாள பிரமாதமான திறமை ஒன்றும் தேவையில்லை, டாடா நிவாரணத் திட்டத்தின்படி முப்பது அகலமான பெரிய கிணறுகள் தோண்டப்பட்டன. அவற்றுள் இவை பொருத்தப்பட்டன. இதோடு, பத்து லட்சம் காலன் நீரைத் தேக்கி வைக்க மண் அணை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் தன்னிறைவு பெறச்செய்யும் உதவிகள் பல. விவசாயத்திலும் கறிகாய் பழவகைகள் பயிரிடுவதிலும் முன்னேற்றமான முறைகளைப் பிரசாரம் செய்ய பதினேரு மாதிரிப் பண்ணைகள் தொடங்கப்பட்டுள்ளன மக்களுக்கு மீன் வளர்ப்பு கற்றுக் கொடுக்கவும் உள்ளூர் கைவேலைகளை ஊக்குவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

புர்வாதியை எதிர்நோக்கும் பிரச்னைகள் எல்லாவற்றையும் தீர்க்க இந்தப் பணிகள் மட்டும் போதாது தான். ஆனால் அவை நடைமுறைக்கு ஏற்ற பிரத்யட்ச ரீதியானவை. மக்கள் தன்னிறைவு கொள்ளச் செய்பவை.

டாடா ஸ்டீல்

TN 4429

திராவிடப் பஞ்சாலைத் தொழிற்சங்கத்தின் மகத்தான வெற்றி

புதுவை ரோடியர் ஆலைத் தொழிற்சங்கத் தேர்தல்முடிவு

புதுவை ரோடியர் ஆலையில் 20—5—68-ல் நடைபெற்ற ஒர்க்ஸ் கமிட்டித் தேர்தலில், திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் 10 இடங்களுக்கு 8 இடங்களில் போட்டியிட்டு எட்டு இடங்களையும் கைப்பற்றியது.

38 ஆண்டுகளாக வலதுசாரி கம்யூனிஸ்டு ஆதிக்கத்தில் இருந்த ஏ. ஐ. டி யு. சி. சங்கம் 10 இடங்களிலும் போட்டியிட்டு பத்து இடங்களிலும் தோற்றது.

உதயசூரியன் சின்னத்தில்நின்ற தி. மு கழகத்தின் தி. ப. தொ. மு. சங்கம் வெற்றி பெற்றது.

தி. ப. தொ. மு. சங்கச் செயலாளர் செ. முத்து அவர்கள், வெற்றி தேடித்தந்த தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

முகவரி மாற்றம்

வெ. கண்ணன்,
வடக்காண் மறை நாடு,
செவல்பட்டி அஞ்சல்,
வழி வெம்பக்கோட்டை,
சாத்தூர் வட்டம்.

சேலம் மாவட்ட தி. மா. மு. க. மாநாடு

ஜூன் திங்களில் நடத்த முடிவு

சேலம் மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் சழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் திரு சுரேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது, வரும் ஜூன் திங்களில் சேலம்—தர்மபுரி மாவட்ட தி. மா. [illegible]க. மாநாட்டை நடத்துவதெ[illegible]வு செய்யப்பட்டது.

மாநாட்டிற்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களையும், மற்றும் அமைச்சர்கள் நெடுஞ்செழியன், கருணாநிதி, செ. மாதவன் ஆகியோரையும், பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி, கி. மனோகரன் எம்.பி., க. அறிவழகன் எம் எல்.சி., எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி., மற்றும் மாநில மாணவத் தலைவர்களையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டின் அமைப்புச் செயலாளராக இரா. இரகுபதி தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இக்கூட்டத்திற்குத் தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன் எம் எல் ஏ., க. செயராம் எம்.எல்.ஏ., சேலம் வட்ட தி. மு. க. செயலாளர் எஸ். ஏ. அன்புக்கரசு, சிற்றுளி சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு அழைப்பின்பேரில் கலந்துகொண்டனர்.

காளப் பட்டியில் சிரணிப்பணி

சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காளப்பட்டி பேரூராட்சி மன்றத்திற்குற்பட்ட காளப்பட்டியிலுள்ள துவக்கப்பள்ளி நான்கு கட்டிடங்களுக்கும் சீரணியினர் வெள்ளையடித்தனர்.

வெள்ளையடிக்கும் பணியினை கா. நா. ஜெகந்நாதன் தொடங்கி வைத்தார்.

தமிழ் எழுத்தாளர் சங்கம்

புதிய தலைவருக்கு இடைக்காலத் தடை

சென்னை, மே 24—

"சிவபாதசுந்தரம் என்பவர், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருக்கத் தகுதியில்லை" என்று அறிவிக்கக் கோரி, மேற்படி சங்க உறுப்பினர் சையத் முகம்மது, நகர சிவில் கோர்ட்டில் ஒரு மனுத் தாக்கல் செய்திருக்கிறார். 'அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது சட்ட விரோதமாகும்' என்று மனுவில் கூறப்பட்டிருக்கிறது.

இம்மனுவின் மீது தீர்ப்பளிக்கப்படும்வரை திரு. சிவபாதசுந்தரம் சங்கத் தலைமைப் பதவிவகிப்பதற்கு இடைக்காலத் தடை விதித்து நகர சிவில் கோர்ட் அடிஷனல் நீதிபதி திரு. ஆர். அரிகர அய்யர் ஆணை பிறப்பித்துள்ளார்.

ஒரே நாளில் எட்டுப் பள்ளிகள்

கட்டிட வேலைத் துவக்கம்

புதுக்கோட்டை கோட்டப் பொறியாளர் (பெருவழித் துறை) திரு. எம். டி. பால்மாணிக்கம் தலைமையில் 20—5—68 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம், உதவிப் பொறியாளர் கே. உடையார் பி.ஈ. ஆகியோரும், மற்றும் பொறியாளர்களும், ஓவர்சியர்களும் திருவரங்குளத்திலிருந்து புறப்பட்டு கும்முப்பட்டி, பெருங்களூர், கருப்புடையான்பட்டி, வாராப்பூர், ஆலங்குடி, மேலக்கருமிபிரான் கோட்டை, பாத்தம்பட்டி, வல்லத்திராகோட்டை ஆகிய கிராமங்களில் ரூ. 60,000 மதிப்புள்ள பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு இடத்தைத் தேர்ந்தெடுத்து—அளவு குறித்து — கடைக்கால் தோண்ட ஏற்பாடு செய்தார்கள்.

ஒரே நாளில் எட்டுக் கிராமங்களில் பள்ளிக் கட்டிடம் கட்ட ஆரம்பித்தது. குறித்து அப்பகுதி வாழ் மக்கள் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

மறைவு

மின்பாறை தி. மு. க. செயலாளர் தோழர் ச. சந்திரனின் இரண்டாவது குழந்தை 23—5—68-ல் இயற்கையெய்திய செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

நாளை இதழில்!

‘அரிசி’யல்!

கட்டுரை இடம் பெறும்.

வானொலியில் ‘இந்திர விழா’

வர்ணனை

சென்னை, மே 27—

மே 25, 26 ஆகிய நாட்களில் பூம்புகாரில் நடைபெற்ற இந்திர விழா நிகழ்ச்சிகளில் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்களும், உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்களும் பங்கு கொண்டனர்.

அந்நிகழ்ச்சி வர்ணனை முறையே மே 28, 29 ஆகிய நாட்களில் மாலை 6-15 மணியளவில் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படும்.

‘சிலை வைக்கும் முயற்சி வேண்டாம்’

தோழர்களுக்கு அமைச்சர் கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, மே 27—

“அருமைத் தோழர்கள் எனக்குச் சிலை வைக்கும் முயற்சியிலும் என் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடும் முயற்சியிலும் ஈடுபடாமல் தங்களை விடுவித்துக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த வேண்டுகோளை மதிப்பதுதான், அவர்கள் என்னிடம் காட்டுகின்ற உண்மையான அன்புக்கு அடையாளமாகும்.

“கழகத்தின் கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு பேணிக் காத்து வருதலும், கழகத்திற்கு வெற்றிகளைத் தேடித் தருவதும், அந்த வேலைகளில் என்னையும் ஊக்குவிப்பதும்தான் அவர்கள் எனக்கு அமைக்கிற சிலைகளாகும் -- தருகிற பிறந்தநாள் பரிசுகளாகும்”

என்று தி.மு. கழகப் பொருளாளரும், பொதுப் பணித் துறை அமைச்சருமான திரு. மு. கருணாநிதி அவர்கள், கழகத் தோழர்களுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் கேட்டுக்கொண்டிருக்கிறார். அவ்வறிக்கையில் மேலும் இதுபற்றி அவர் விளக்கியிருப்பதாவது:—

“கழகத் தோழர்களும், சைதைத் தொகுதி நண்பர்களுமாகச் சேர்ந்து சென்னையில் என் பிறந்தநாளையொட்டி சிலை ஒன்று அமைக்க ஏற்பாடு செய்து—சூன் 3-ம் நாளன்று அறிஞர் அண்ணா அவர்களைக் கொண்டு அதற்கான திறப்பு விழாவை நிகழ்த்தவும் அண்ணா அவர்களிடம் ஒப்புதல் பெற்று—அதற்கான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

“அவர்களுடைய அன்புக்கு என் நன்றி உணர்வைக் காணிக்கையாக்குகிறேன். சிலையைத் திறந்துவைக்கப் பெருமனத்துடன் ஒப்புதல் அளித்துள்ள அண்ணன் இருக்கும் திக்குநோக்கி வணக்கம் செலுத்துகிறேன்.

“ஆனால், பிறந்த நாள் கொண்டாடுவது – சிலை அமைப்பது ஆகிய பெருமைகளுக்கான தகுதியை நான் பெறவில்லை என்பது, அடக்கத்தின் காரணமாக அல்ல – திறந்த மனத்துடன் தெரிவிக்கும் உண்மை நிலையாகும்.

“கழகத்திற்கு நான் ஆற்றியுள்ள பணிகளை மற்றவர் ஆற்றியுள்ள பணிகளுடன் ஒப்புநோக்கின், கடுகளவே ஆகும். நாட்டுக்கும் இலக்கியத் துறைக்கும் நான் செய்ய வேண்டிய கடமைகள் இன்னும் ஏராளமாக உண்டு. அதற்குள் அன்பர்கள் அவசரப்படுவது சரியுமல்ல-முறையுமல்ல!

“கழகத்தின் தொண்டர்கள்—தலைவர்கள்— அறிவாற்றல் உடையோர் – அரசியல் பண்பாளர் அனைவரையும் கொண்ட ஒருமித்த உருவச் சிலையாகத்தான் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அமைத்திருக்கின்றோம்.”

தஞ்சைக் காங்கிரசாரின் அரசியல் பண்பற்ற போக்கு

மனம் வெதும்பி வெளியேறுகிறார் நகராட்சித்தலைவர்

தஞ்சை, மே 27 —

“அமைச்சர்களை அழைத்து—அவர்களும் வருவதாக ஒப்புக்கொண்டு—அதன் பிறகு தீர்மானம் நிறைவேற்றப்படவில்லையென்றால், என்மீது நம்பிக்கை இல்லாததை மட்டுமல்ல - அமைச்சர்களையும் அவமதிப்பதுபோல இருக்கிறது.

“ஆகவே, பதவியில் நான் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை; நகராட்சித் தலைவர் பதவியையும், உறுப்பினர் பதவியையும் இராஜினாமாச் செய்கிறேன்”

என்று, தஞ்சை நகராட்சி மன்றத் தலைவர் திரு. வேணுகோபால் நாயுடு அவர்கள் தெரிவித்துள்ளார்.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த தஞ்சை நகராட்சித் தலைவரான அவர் கொண்டுவந்த தீர்மானத்திற்கு எதிராகக் காங்கிரசு உறுப்பினர்களே வாக்களித்ததால் அவர், தம் பதவியைவிட்டு விலகி விட்டார்.

நகராட்சிப் புதுக் கட்டிடத்தைத் திறந்துவைக்கப் பொதுப்பணி அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களை அழைக்கவும், நகராட்சிப் புதுக் கட்டிடம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டுவிக்க உள்ளாட்சி அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களை அழைக்கவும், திரு. வேணு கோபால் நாயுடு இரு தீர்மானங்களைக் கொண்டுவந்தார்.

‘நகராட்சிக் கட்டிட வேலைகள் இன்னும் முழுமை பெறவில்லை’ என்று கூறி, அத்தீர்மானங்களைக் காங்கிரசு உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

கட்டிட வேலைகளை நிறைவு செய்யும் பொறுப்பைத் தாம் ஏற்பதாகவும், அமைச்சர்களைத் தாம் ஏற்கனவே அழைத்துவிட்டதாகவும் அவர் கூறினர்; இத்தீர்மானங்களுக்கு ஆதரவு அளிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இரு தீர்மானங்களும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டன; தீர்மானங்களுக்கு எதிராக 21 காங்கிரசு உறுப்பினர்களும், ஆதரவாக 8 தி.மு.க உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

அதனால், காங்கிரசுக்காரர்களே தமக்கு எதிராக இருப்பதாகக் கருதி, தம் பதவி விலகல் கடிதத்தை ஆணையாளரிடம் கொடுத்தார்.

அவர் தமது பதவி விலகல் பற்றி மேலும் விளக்கியுள்ளதாவது:—

“சனநாயக நாட்டில் கட்சி வேறு—அமைச்சர்கள் வேறு; கட்சியையும் அமைச்சர்களையும் சம்பந்தப்படுத்திப் பேசுவது தவறு. இதுபோது காங்கிரசுக்காரனாக நான் இருந்தாலும், நான் வகிப்பது நகர மன்றத் தலைவர் பதவி; நான் எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவன்; மக்கள் நலனுக்காக சனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவன்; ஆகவே, ‘யார் எந்தக் கட்சி’ என்ற பிரச்சினை இல்லை; ‘தலைவர்’ என்ற முறையில், பொதுப் பணிகளில் கட்சி வேறுபாடு இன்றி ஈடுபடவேண்டியவன்.

அமைச்சர்கள் கருணாநிதியும் முத்துசாமியும் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர்களாகி, மக்களுக்குப் பணியாற்றி வருபவர்கள். எனவே, ‘அமைச்சர்’ என்ற முறையில் கட்டிடத் திறப்பு விழாவுக்கு மு. கருணாநிதியையும், அடிக்கல்நாட்டு விழாவுக்கு அமைச்சர் முத்துசாமியையும் அழைப்பது என்று தீர்மானம் கொண்டுவந்தேன்.

ஆனால், காங்கிரசு உறுப்பினர்கள் அதிகமாக உள்ள நகராட்சி மன்றத்தில், நான் கொண்டு வந்த தீர்மானம் தோற்றது என்றால், என்மீது அவர்களுக்குள்ள அவநம்பிக்கையையே தெரிவிக்கிறது.”

தில்லை வில்லாளன்

சுற்றுப்பயணம்

மே 29: விழுப்புரம்; 31: திருத்துறைப்பூண்டி, ராயநல்லூர்; சூன் 1: சிதம்பரம்; 2: சங்கரன் கோவில்.

கோ. விசுவநாதன்

எம்.பி. நிகழ்ச்சிகள்

மே 28: விளாப்பாக்கம்; 29: பெங்களூர்; 31: சருகம்பத்தூர். சூன் 2: திமிரி.

கார் விபத்துக்குள்ளான இளமுருகு பொற்செல்வி

சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்

அமைச்சர்கள்--கழகத் தோழர்கள் உடல்நலம் விசாரித்தனர்

சென்னை, மே 26—

திண்டிவனத்திற்கு அருகில் ஏற்பட்ட கார் விபத்தில் காயமடைந்து பெரிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்களின் உடல் நலம் தேறி வருகிறது.

மருத்துவமனையில் அவரை, அமைச்சர் மு. கருணாநிதி, அமைச்சர் ஏ.கோவிந்தசாமி ஆகியோரும் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., முரசொலி மாறன் எம்.பி., திருமதி வெற்றிச்செல்வி அன்பழகன், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் மா. கந்தசாமி, சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், முன்னாள் மேயர் வி. முனுசாமி, திருமதி அலமேலு அப்பாதுரை எம்.எல்.சி பொதுக் குழு உறுப்பினர் ஆ. செ. கிருஷ்ணன், தோழியர் சற்குணம், மற்றும் ஏராளமான கழகத் தோழர்களும் நண்பர்களும் சென்று உடல் நலம்பற்றி விசாரித்தனர்.

மத்திய பள்ளிகளில் ஆங்கில ஒழிப்பு

டில்லிக்குத் தமிழக அரசு கண்டனம்

அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

திருச்சி, மே 27

“மத்திய அரசுப் பள்ளிகளில் ஆங்கிலத்திற்கு உள்ள பயிற்று மொழித் தகுதியை ஒழிக்க முடிவு செய்துள்ள மத்திய அரசின் தகாத போக்கைக் கண்டித்து மத்திய அரசுக்குத் தமிழக அரசு தன் வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கும்”

என்று கல்வியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கல்லக்குடியில், செய்தியாளர்களிடையே பேசுகையில் கூறினார்.

“மத்திய அரசின் கல்வித் துறையின்கீழ் உள்ள மத்திய பள்ளிகள் நிறுவனம், நாடு முழுவதும் மொத்தம் 118 பள்ளிகளை நடத்துகிறது.

இந்தப் பள்ளிகளில் மொத்தம் 57,000-பேர் படிக்கிறார்கள்.

தமிழகத்தில் இவ்விதப் பள்ளிகள் 8 இருக்கின்றன. ஆங்கிலம், இந்தி ஆகிய இரு மொழிகளும் இப்பள்ளிகளில் பயிற்று மொழிகளாகத் தற்போது பயன்படுத்தப் பட்டுவருகின்றன.

1968—69-ம் ஆண்டிலிருந்து இப்பள்ளிகளில் ஆங்கிலப் பாட வகுப்புக்களை ஒழிகக மத்திய பள்ளிகள் நிறுவனம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக அந்தப் பள்ளிகட்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முதலாவது வகுப்பு முதல் ஆறுவது வகுப்பு முடிய இத்தீர்மானம் 1968—69-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும். அந்த ஆறு வகுப்புகளிலும் இனி இந்தி மொழி மட்டுமே பயிற்சி மொழியாக இருக்கும்.

இந்த ஆங்கில ஒழிப்புத் திட்டமானது 1969—70-ம் ஆண்டிலிருந்து ஆண்டுக்கு ஒரு வகுப்பு வீதம் 7, 8, 9, 10, 11 ஆகிய வகுப்புக்களுக்கும் படிப்படியாக விரி[illegible]கப்படும்.

ஆங்கிலத்தை ஒழிக்கும் இந்தத் திட்டம் சம்பந்தமாக மத்திய அரசு கல்வியமைச்சர் திரிகுண சென் அவர்களைக் கேரளக் கல்வி அமைச்சர் டெல்லியில் சந்தித்து வன்மையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்துச் செய்தியாளர்கள், தமிழகக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்; அவர் கூறியதாவது:—

“தமிழக அரசும் இதுபோல ஆங்கில ஒழிப்புக்குக் கண்டனம் தெரிவித்து அந்தப் பள்ளிகளில் ஆங்கில நீடிப்புக்கு வழி செய்யுமாறு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளும்.”

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

28--5--68

சென்னை —மயிலை

பகுதி தி.மு.க. சார்பில்; வெளிநாடு சென்று திரும்பிய இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ., அவர்கட்குப் பாராட்டு; மாலை 7 மணிக்கு கிழக்கு மாட வீதி மாங்கொல்லையில்; தலைவர்: எஸ். வி. வேலு; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, நடிபபிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, ஜார்ஜ்கோமகன், மாநகராட்சி உறுப்பினர்கள் ஏ. சி. துளசிங்கம், கே. கோவிந்தசாமி, டி. தம்பிதுரை, ஏ. செல்வராசன், டி. கே. கபாலி, வி. தமிழ்மணி, மற்றும் தோழர்கள் த. சாரங்கன், எம். கே. கபாலி, வி. குப்புசாமி, எம். நாகப்பன், வி. செல்வராசன், கே. இராமலிங்கம், டி. கே. கனகசபை, ஏ. எஸ். சங்கரன், என். மாணிக்கம்.

கரூர்

7-வது வட்ட தி.மு.க. — எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு எம் ஜி ஆர். திடலில்; தலைவர்: தா. ஜெகநாதன்; பேசுவோர்: ஆர். என். இராமசாமி, எஸ். நல்லுசாமி, கே. ஜி. உமாகாந்தன், இரா. மாரிமுத்து. பரமத்தி சண்முகம் (தேவராசன் -- நிர்மலா குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்).

வள்ளியூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு திருவள்ளுவர் கலையரங்கில்; தலைவர்: ம. செங்குட்டுவன்; பேசுவோர்: கே ஆர். பி. மணிமொழியன், வெ. கண்ணன், ஆ. பூ. இளங்கோவன்.

29--5--68

சென்னை 92-வது வட்டம்

அண்ணா இளைஞர் மன்றச் சார்பில் கோடம்பாக்கம் அண்ணா நகர் அருகில்; தலைவர்: ஏ. எஸ். இராமன் எம்.சி.; பேசுவோர்: கி. மனோகரன் எம்.பி., முரசொலி மாறன் எம்.பி., சிட்டிபாபு எம் பி., மு. கோபால் எம்.எல்.ஏ., காஞ்சி மணிமொழியார், சா. கணேசன் எம்.சி., மா. செங்குட்டுவன், சோ. கி. மூர்த்தி, செ. கண்ணப்பன், க. துரை, புலியூர் இராதா, மனசி. மெ. மாணிக்கம்.

சென்னை 40-வது வட்டம்

‘ஆகாசவாணி’யை நீக்கி ‘வானொலி’ என்று மாற்றிய அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கட்கு வெள்ளி வானொலிப் பெட்டி அளிப்பு விழாவும், மொரீஷியஸ் தீவுக்கு வழியனுப்பும்; மாலை 7-மணிக்கு சூளை மாணிக்கச் செட்டித் தெருவில்; தலைவர்: என். கே. சாமி; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., ம. பொ. சிவஞானம் எம்.எல் ஏ., சிட்டிபாபு எம்.பி., டாக்டர் ஹாண்டே எம்.எல்.ஏ., மு. சன்னியப்பன் எம்.சி., மற்றும் பலர்.

அமைச்சர்

மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

மே 28 காலை 10 மணி: ஆரணி ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பங்கேற்பு; மாலை 4 மணி: ரண்டம் கொரட்டூர் உயர்நிலைத் தண்ணீர்த் தொட்டித் திறப்பு விழா; மாலை 5 மணி: கஸ்தம்பாடி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு—குன்னத்தூர் துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா; மாலை 7மணி: ஆரணி நகராட்சி வரவேற்பு; 7-30 மணி: ஆரணி ஊராட்சி ஒன்றிய வரவே[illegible] 8 மணி: விளாப்பாக்[illegible] பொதுமக்கள் வரவே[illegible] 9 மணி: ஆரணி பொதும[illegible] வரவேற்பு.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.